**27. அத்தினாபுரத்தைச் சாய்த்த கதை**

துரியோதனன் தன்னுடைய மகளான இலக்கணைக்குத் தானே மணாளனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் திருமண விழா (சுயவரம்) ஏற்படுத்தினான். கண்ணனுடைய மனைவி யரில் ஒருத்தியாகிய சாம்பவதி என்பவளுடைய



மகனான சாம்பன்என்பவன் இலக்கணையை வலுக்கட்டாயமாகத் தூக்கிக்கொண்டு சென்றான். துரியோதனன் முதலியோர்சாம்பனை எதிர்த்துப் போரிட்டு அவனைப் பிடித்துக் காவலில் வைத்தார்கள். இச்செய்தியைப் பலராமர்அறிந்தார். தாம் சாம்பனை விடுவித்து வருவதாகச் சொல்லிப் புறப்பட்டார். அத்தினபுரத்தை அடைந்துதுரியோதனன் முதலியவர்களைக் கண்டார். 'தம்முடைய சாம்பனை விடுதல் வேண்டும்" என்று கூறினார். கௌரவர்கள் பலராமரைப் பார்த்துத், "தீய செயல் செய்த அவனை நாங்கள் விடமாட்டோம்" என்றுகட்டுப்பாடாகப் பேசியதன்றிப் பலராமரை இகழ்ந் தும் பேசினார்கள். பலராமர் அளவற்ற சினத்தோடு எழுந் தார். 'குருகுலத்தார் வாசஞ் செய்துகொண்டிருக்கும் இந்நகரத்தைக் கங்கையிற் கவிழ்த்து விடுவேன். அஃதன்றிநிலத்தில் கௌரவப் பூண்டேயில்லாமல் ஒழித்தும் விடு வேன்' என்று சொன்னார். தம்முடைய கலப்பையை மதிலின் மேலுள்ள நாஞ்சில் என்னும் உறுப்பில் மாட்டியிழுத்தார். அதனால் அப்பட்டணம் முழுவதும் அசைந்துசாயத் தொடங்கியது. அதனைக் கண்ட கௌரவர்களனைவரும் மனங்கலங்கினார்கள். சாம்பனை இலக்கணையோடும் பல சிறப்புக்களோடும் பலராமர்முன் கொண்டு வந்து விட்டார்கள். பலவாறு புகழ்ந்துபோற்றினார்கள். அவ்வளவிற் பலராமர் தம்முடைய கலப்பையை வாங்கிக் கொண்டார்.

[ஆண்மையைக்காட்டுதல்]